*7*

# ஒரு புதிய உடன்படிக்கை

## (எரேமியா 31)

பழைய ஏற்பாடு முழுவதிலும் தேவன், தமது மக்களுடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்தி அதைக் காத்துக் கொள்பவராக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறார். "உடன்படிக்கை" என்பது தேவன் தமது ஆசீர்வாதத்தைக் கிருபையாக அளிக்கும் ஏற்பாடாகவும் தமது பெருந்தன்மைக்குப் பதில் அளிக்கும் வகையில் தமது சித்தத்திற்கு இணங்கி நடக்கும்படி அவர்களை அழைக்கும் கருவியாகவும் உள்ளது.

### தேவனுடைய நான்கு கூட்டல் ஒன்று உடன்படிக்கைகள்

தேவன் தம்முடைய மக்களுடன் ஏற்படுத்திய நான்கு உடன்படிக்கைகள் பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டுள்ளன:

1. *நோவாவுடன் தேவனுடைய உடன்படிக்கை.* ஆதியாகமம் 6:18ல் தேவன் நோவாவையும் அவரது குடும்பத்தாரையும் வர இருந்த பெருவெள்ளத்தில் இருந்து பாதுகாப்பதாக வாக்குத்தத்தம் செய்தார். பிற்பாடு (ஆதியாகமம் 9:11) அவர், இனி ஒருக்காலும் பூமியை வெள்ளத்தினால் அழிப்பதில்லை என்று வாக்குத்தத்தம் செய்தார்.

2. *ஆபிரகாமுடன் தேவனுடைய உடன்படிக்கை.* ஆதியாகமத்தில் (அதிகாரங்கள் 12; 15; 17), தேவன் தம்மைப் பின்பற்றும்படி ஆபிரகாமை அழைத்தார் மற்றும் அவரை ஒரு பெரிய மக்களினம் ஆக்குவதாகவும் அவர் மற்ற எல்லா மக்களினங்களையும் ஆசீர்வதிக்கக் கூடும்படிக்கு அவரை ஆசீர்வதிப்பதாகவும் வாக்குத்தத்தம் செய்தார். இந்த உடன்படிக்கை, கிறிஸ்து நிறைவில் வர இருந்த, ஆபிரகாமின் சரீரப்பிரகாரமான சந்ததியாரான இஸ்ரவேல் மக்களினம் நிலைநாட்டப்படுதலை விளைவித்தது. இவ்வாறாக பூமியில் மக்கள் யாவரும் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

3. *தாவீதுடன் தேவனுடைய உடன்படிக்கை.* 2 சாமுவேல் 7ம் அதிகாரத்தில் தாவீது, கர்த்தருக்கென்று ஒரு "வீட்டை" (ஆலயத்தை) கட்டுவதற்கான தமது விருப்பத்தை வெளியிட்டார், அதற்குத் தேவன், தாவீதிற்கென்று தாம் ஒரு "வீட்டை" (பரம்பரையை அல்லது அரச வம்சத்தை)க் கட்டப்போவதாகக் கூறிப் பதில் அளித்தார். மீண்டுமாக இந்த வாக்குத்தத்தம், என்றென்றைக்கும் ஆளுகை செய்பவராக வரவிருந்த "தாவீதின் மகனான" இயேசு கிறிஸ்துவின் மூலம் நிறைவேற்றப்பட்டது.

4. *இஸ்ரவேல் மக்களுடன் தேவனுடைய உடன்படிக்கை,* பழைய ஏற்பாட்டின் முதன்மை உடன்படிக்கையானது, இஸ்ரவேல் மக்களை எகிப்தில் அவர்கள் அனுபவித்திருந்த 400 ஆண்டுகள் கால அடிமைத்தளையில்

இருந்து விடுவித்த பின்பு, சீனாய் மலையில் அவர்களுடன் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கையாகும் (யாத்திராகமம் 20). இதில் தேவன் இஸ்ரவேல் மக்களின் தேவனாக இருப்பார் மற்றும் அவர்களைத் தாம் தேர்ந்து கொண்ட மக்களினமாக்குவார் என்ற தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அடங்கியிருந்தன மற்றும் அவர் மோசேயின் மூலமாகக் கொடுக்க இருந்த பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய உறுதிப்பாடு கொண்டிருக்க வேண்டும் என்ற விஷயமும் அடங்கியிருந்தது. இந்த உடன்படிக்கையில், குறிப்பாக பிரமாணத்தைக் கொடுத்தல் பற்றிய விஷயத்தில், மோசேயின் மையப்பணிப்பொறுப்பின் காரணமாக, இது "மோசேயின் உடன்படிக்கை" என்று அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. இந்த உடன்படிக்கை தேவனுக்கும் மோசேக்கும் இடையிலானதாக அல்ல, ஆனால் தேவனுக்கும் இஸ்ரவேல் மக்களினம் முழுவதற்கும் இடையிலானதாக இருந்தது என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

பழைய ஏற்பாடு, எதிர்காலத்தில் வர இருந்த, ஆனால் பழைய ஏற்பாட்டு எழுத்துக்களில் கூறிமுடிக்கப்பட்ட காலத்தின்போது வராதிருந்த, ஐந்தாவது உடன்படிக்கை ஒன்றைப் பற்றியும் பேசுகிறது. இந்த "புதிய உடன்படிக்கை" எரேமியா 31:31-34ல் முன்னுரைக்கப்பட்டது: "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன் ..."

எரேமியா தீர்க்கதரிசனப் புத்தகத்தின் முதல் இருபத்தி ஒன்பது அதிகாரங்கள், வரவிருந்த தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றி, கலகக்கார மக்களுக்கு அறிவித்தல் என்ற எரேமியாவின் பணிப்பொறுப்பினுடைய வரலாற்றைப் பற்றி முதன்மையாகக் கூறுகின்றன. இக்கால கட்டத்தின்போது, வடக்கு இராஜ்யம் (இஸ்ரவேல்) ஏற்கனவே அசீரியர்களால் அடிமைப்படுத்தப்பட்டு இருந்தது, மற்றும் இப்போது தெற்கு இராஜ்யம் (யூதா) பாபிலோனியர்களின் கைகளில் அதே விதமாக அழிவைச் சந்தித்திருந்தது. இந்த படையெடுத்தல் பற்றிய தீர்க்கதரிசனங்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் பலரின் எழுத்துக்களில் காணப்படுகின்றன. அவர்கள் யாவரும் ஒன்றுபோல, அடிமைத்தளைக்குப் பின்னர் வரவிருந்த மேன்மையான நாட்களைப் பற்றிய நம்பிக்கையைக் கொடுத்தனர். அழிவு என்பது தவிர்க்க இயலாததாக இருந்தது, ஆனால் தேவன் இன்னும் இஸ்ரவேலுடன் தமது கிரியையை முடிக்கவில்லை; அவர் மீண்டும் ஒருமுறை அவர்களை ஆசீர்வதிக்கப் போவதாக வாக்குத்தத்தம் செய்தார்.

மற்ற தீர்க்கதரிசிகளின் செய்திகளைப் போன்றே எரேமியாவின் செய்தியிலும், அழிவு மற்றும் நம்பிக்கை என்ற கூறுகள் அடங்கியிருந்தன. அழிவு பற்றிய அவரது தீர்க்கதரிசனங்கள் 1 முதல் 29வரையிலான அதிகாரங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன, மற்றும் நம்பிக்கையின் செய்தியானது 30ம் அதிகாரத்தில் தொடங்குகிறது:

> இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் உன்னோடே சொன்ன எல்லா வார்த்தைகளையும் ஒரு புஸ்தகத்தில் எழுதிக்கொள். இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் இஸ்ரவேலும் யூதாவுமாகிய என் ஜனத்தினுடைய சிறையிருப்பைத் திருப்பி, நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த

*தேசத்துக்கு அவர்களைத் திரும்பவரப்பண்ணுவேன்; அதை அவர்கள் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (வசனங்கள் 2, 3).*

அழிவிற்குப் பின்னர் மீளக்கட்டுவித்தல் பற்றிய இதுபோன்ற வாக்குத்தத்தங்கள் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களுக்கே உரியவையாக இருக்கின்றன, ஆனால் மீளக்கட்டுவித்தலின் இந்த நம்பிக்கைக்கு ஏரேமியா தனிச்சிறந்த ஒரு பங்களிப்பை ஏற்படுத்தினார். தேவனுக்கும் அவரது மக்களுக்கும் இடையிலான ஒரு புதிய உடன்படிக்கை ஏரேமியா 31:31-34ல் மாத்திரமே காணப்படுகிறது. எரேமியாவின் கூற்றுப்படி, இஸ்ரவேல் மக்களுடன் உறவுபடுவதற்கு, முந்திய உடன்படிக்கையைக் காட்டிலும் அதிகமான ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும் ஒரு புதிய வழியை தேவன் நிலைநாட்டுவார்:

*இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாட்களுக்குப்பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும். ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.*

## புதிய உடன்படிக்கையைப் பற்றிய எரேமியாவின் தீர்க்கதரிசனம்

எரேமியா 31ல் உள்ள உடன்படிக்கையானது முந்திய உடன்படிக்கையில் இருந்து பிரித்து வைக்கப்படும் அளவுக்கு, அதில் அவ்வளவு "புதியதும்" வேறுபாடுமாக இருப்பது என்ன? எரேமியாவின் தீர்க்கதரிசனம் இந்தப் புதிய உடன்படிக்கையின் முக்கியமான பல பண்புகளை புறக்குறிப்பிடுகிறது:

*1. இது எதிர்காலத்தில் வரும்.* எரேமியா காலத்தைப் பற்றித் திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை; அவர், "'இதோ, நாட்கள் வரும்' ..." என்று மாத்திரம் கூறினார் (31:31). திட்டவட்டம் இல்லாத இப்படிப்பட்ட வகையில் எதிர்காலத்தைப் பற்றிப் பேசுதல் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளிலேயே தனிப்பட்ட விஷயமாக இருந்தது. "அந்நாட்களுக்குப்பின்பு," "பின்வரும் நாட்களில்" அல்லது வெறுமனே "பின்பு" என்பவை போன்ற சொல்விளக்கங்கள், தேவன் மீண்டும் ஒருமுறை மக்களுக்குத் தயவுடன் நடந்துகொள்வார் என்று

உறுதிப்பாடுகள் அளிக்கப் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டன. எரேமியா, இந்தப் புதிய உடன்படிக்கையின் நிலைநாட்டம் பற்றிக் குறிப்பிட்ட காலம் எதையும் கொடுக்கவில்லை என்றாலும், இது இயல்பாகவே, வரவிருந்த மேசியாவின் காலத்துடன் மக்கள் மனங்களில் இணைவு கொண்டிருக்க வந்தது. தேவனால் அபிசேஷகம் பெற்ற ஒருவர் வரும்போது, அவர் இந்தப் புதிய உடன்படிக்கையின் யுகத்தைத் தொடக்கி வைப்பார்.

2. *இது இஸ்ரவேல் மற்றும் யூதா கோத்திரங்களை மறுபடியும் ஒன்றிணைக்கும்.* புதிய உடன்படிக்கை "இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும்" இருக்கும் என்று எரேமியா குறிப்பிட்டார் (வசனம் 31). இந்த வாக்குத்தத்தம் இரு காரணங்களினால் குறிப்பிடத் தக்கதாக இருந்தது. முதலாவது, சாலொமோனின் காலத்திற்குப் பின்பு, முன்னூறு ஆண்டுகளுக்கும் மேலாக நாடானது பிரிந்து கிடந்தது. இரண்டாவது, இஸ்ரவேல் நாட்டில் இருந்த பத்துக் கோத்திரங்கள் - வடக்கு இராஜ்யம் - அரசியல் உயிர்ப்பொருள் என்ற வகையில் நிலைத்திருக்கவில்லை. அந்தக் கோத்திரங்கள் அசீரியர்களால் வெற்றிகொள்ளப்பட்டு சிதறடிக்கப்பட்டிருந்தனர். மீளக்கட்டுவித்தல் என்பது முந்திய கோத்திரம் மற்றும் அரசியல் முறைமையுடன் மாத்திரம் வரையறுக்கப்பட்டிராது. ஏற்கனவே எரேமியா, ''இஸ்ரவேலை'' மீளக்கட்டுவித்தல் என்பதில் "எல்லா மக்களினங்களும்" உள்ளடங்கும் என்று கருத்துத் தெரிவித்திருந்தார். (காண்க 3:16-18; இந்த வாக்குத்தத்தத்தின் உலகளாவிய அம்சம் எரேமியா 31ல் குறிப்பிடப் பட்டிருப்பதில்லை.)

3. *இது மக்களின் இருதயங்களில் தங்கியிருக்கும்.* பழைய உடன்படிக்கையானது, தேவனிடத்தில் இஸ்ரவேல் மக்களின் பொறுப்புக்களை முன்வைத்த பிரமாணங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது. இந்தப் பிரமாணங்களைக் கைக்கொள்ளுதல் என்பது அவர்களைத் தேவன் விரும்புகிற வகையில் இருக்கும் பரிசுத்த மக்களாக்கும். புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தியதில் தேவன், "நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி ..." என்று வாக்குத்தத்தம் செய்தார் என்பதாக எரேமியா கூறினார் (வசனம் 33). வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், புதிய உடன்படிக்கைக்குள் இருக்கும் தேவனுடைய சித்தத்தை மக்கள் விரும்பும் வகையில் அது அவர்களின் ஒரு பாகமாகும். இருப்பினும், "இருதயப் பூர்வமான மார்க்கம்" என்ற இந்தக் கருத்தானது பழைய ஏற்பாட்டிற்கு முற்றிலும் புதியதாக இருப்பது இல்லை. உபாகமம் 30:6ல் மோசே, "உன் தேவனாகிய கர்த்தரில் நீ உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அன்புகூர்ந்து பிழைக்கும்படி, உன் தேவனாகிய கர்த்தர் உன் இருதயத்தையும் உன் சந்ததியாரின் இருதயத்தையும் விருத்தசேதனம்பண்ணி," என்று கூறினார். தேவனுடைய மக்கள், பழைய உடன்படிக்கையைத் தேவன் விரும்பிய அளவிற்குத் தங்கள் இருதயங்களில் காத்துக் கொண்டு இருந்தது இல்லை - ஆனால் வரவிருந்த புதிய உடன்படிக்கையில் அது நடக்கும் என்று எரேமியா கூறினார்.

4. *இது போதிக்கப்பட வேண்டியிருப்பதற்கு மாறாக எல்லாராலும் அறியப்பட்டு இருக்கும்.* "இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும்

என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் ...” (வசனம் 34). பழைய உடன்படிக்கையின் கீழ், ஆபிரகாமின் மாம்சப் பிரகாரமான சந்ததியார் - இஸ்ரவேல் மக்களினம் - தேவனுடைய உடன்படிக்கையின் மக்களாக இருந்தனர்; ஆனால் இஸ்ரவேல் மக்களின் பின்தொடரும் சந்ததி ஒவ்வொன்றிற்கும் கர்த்தருடைய வழிகளைப் பற்றி அறிவுறுத்தவும் அவரைப் பற்றி அறியப் போதிக்கவும் வேண்டியிருந்தது. இருப்பினும் புதிய உடன்படிக்கையின் கீழ், அதில் உள்ளடங்கியிருக்கும் ஒவ்வொருவரும், உடன்படிக்கையின் மக்கள் மத்தியில் இருப்பதற்கான ஒரு முன்தகுதி என்ற வகையில் “கர்த்தரை அறிந்து” இருப்பார்.

5. *இது மீறப்படாது இருக்கும்.* 32ம் வசனத்தில் எரேமியா, “நான் அவர்கள் பிதாக்களை ... அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ... அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே” என்று கூறினார். இஸ்ரவேல் மக்கள் பழைய உடன்படிக்கையின் நிபந்தனைகளைத் திரும்பத் திரும்ப மீறினார்கள் என்பதே அந்த உடன்படிக்கையின் குறிப்பிடத்தக்க உண்மையாக இருந்தது. அந்த ஒப்பந்தத்தில் தேவன் தமது பகுதியை உயர்த்திப்பிடித்திருந்தாலும், அவர்கள் தங்கள் பகுதியில் அடிக்கடி உண்மையற்றவர்களாக இருந்தனர். யாத்திராகமம் 32ம் அதிகாரத்தின்படி, பரிதாபகரமான கீழ்ப்படியாமை என்பது, பொன் கன்றுக்குட்டியை வணங்குதல் என்ற நிகழ்வுடன், ஏறக்குறைய அந்த உடன்படிக்கை நிலைநாட்டப்பட்ட உடனே தொடங்கிற்று. அவர்களின் வரலாறு முழுவதிலும் மீறுதல்கள் திரும்பத் திரும்ப நடைபெற்றது. நடபடிகள் 7ல் ஸ்தேவான், மனதைக் கலக்கும் தமது உரையில், இஸ்ரவேல் மக்கள் கர்த்தருடனான தங்கள் உடன்படிக்கையின்படி வாழத்தவறிய வரலாற்றை ஆய்வு செய்கையில் விஷயம் இவ்வளவு அதிகமாக இருந்தது, அவர் பின்வரும் கொடிய அச்சுறுத்தலுடன் தமது உரையை முடித்தார்:

> வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாங்களைப்போல நீங்களும் பரிசுத்தஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள். தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலைசெய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலைசெய்த பாதகருமாயிருக்கிறீர்கள். தேவதூதரைக்கொண்டு நீங்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்தும், அதைக் கைக்கொள்ளாமற்போனீர்கள் என்றான் (நடபடிகள் 7:51-53).

புதிய உடன்படிக்கையானது, மாறுபட்டதாக இருக்கும், அது ஒருக்காலும் மீறப்படாது என்று தேவன், எரேமியா மூலமாக வாக்குத்தத்தம் செய்தார்.

6. *இது ஒருக்காலும் முடிவுறாது. எரேமியா,* புதிய உடன்படிக்கையின் வருகை பற்றிய தமது அறிவிப்பைப் பின்வரும் வாக்குத்தத்தத்துடன் தொடர்ந்தார்: “இந்த நியமங்கள் [பௌதீகரீதியான அண்டம், தனது இயற்கை விதிகளுடன்; வசனம் 35] எனக்கு முன்பாக இல்லாதபடிக்கு ஒழிந்து போனால், அப்பொழுது இஸ்ரவேல் சந்ததியும் எனக்கு முன்பாக என்றைக்கும் ஒரு ஜாதியாயிராதபடிக்கு அற்றுப்போம் என்று கர்த்தர் சொல்லுகிறார்” (வசனம் 36).

புதிய உடன்படிக்கையின் நிரந்தரத்தன்மை என்பது பழைய உடன்படிக்கையுடன் பொருந்தியிருப்பது சாத்தியமில்லை. இந்த உடன்படிக்கை நிலைநாட்டப்பட்ட உடன், வேறொன்றிற்கு ஒருக்காலும் அவசியமிராது.

*7. இது முற்றிலுமான மன்னிப்பைக் கொண்டுவரும்.* ஒருவேளை இந்தப் புதிய உடன்படிக்கையின் மாபெரும் வாக்குத்தத்தம் என்பது, 34ம் வசனத்தின் பின்பகுதியில் காணப்படலாம்: "நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்." தேவனுடைய பிரமாணத்தை மீறி அவர்கள் செய்திருந்த எல்லாவற்றையும் பற்றி ஆழ்ந்து சிந்திக்கையில், மன்னிப்பின் வாக்குத்தத்தம் என்பது உண்மையிலேயே குறிப்பிடத் தகுந்ததாக இருந்தது.

## நிலைநாட்டப்பட்ட தேவனுடைய புதிய உடன்படிக்கை

இந்தப் புதிய உடன்படிக்கையின் காலம் பற்றி எரேமியா திட்டவட்டமாகக் குறிப்பிடாத உண்மையை நாம் யாவரும் இன்னமும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறோம். புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இதை எதிர் கொண்டிருக்கவில்லை; அவர்கள் புதிய உடன்படிக்கையானது சிலுவையில் இயேசுவின் மரணத்தில் நிலைநாட்டப்பட்டது என்று ஒருமனதாக உறுதிப்படுத்தினர். இயேசு தமது சீஷர்களுடன் இணைந்து கடைசி இரவு உணவை உண்டு, பின்வரும் பின்பற்றாளர்கள் கடைப்பிடிக்கக் கர்த்தருடைய பந்தியை நிலைநாட்டியபோது, அவர் எரேமியாவினால் பேசப்பட்ட இந்தப் புதிய உடன்படிக்கை தமது மரணத்தில் நிலைநாட்டப்படும் என்ற உண்மைக்குத் திட்டவட்டமான குறிப்பை ஏற்படுத்தினார்: "போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்" (லூக்கா 22:20).

இயேசுவின் வருகை மற்றும் மரணம் ஆகியவற்றினால் புதிய உடன்படிக்கை இப்போது நிலைநாட்டப்பட்டிருக்கிறது என்ற உண்மையைப் புதிய ஏற்பாட்டின் பல குறிப்புகள் உறுதிப்படுத்துகின்றன. ஏரேமியாவினால் குறிப்பிடப்பட்ட வாக்குத்தத்தங்கள் யாவையும் இப்போது நிறைவேற்றப்பட்டு (அல்லது நிறைவேற்றப்படும் செயல்முறையில்) உள்ளது.

*1. புதிய உடன்படிக்கையானது முன்னுரைத்தலைக் காக்கும் வகையில் வந்தது.* ஏரேமியாவின் காலத்தில் இருந்து தோராயமாக அறுநூறு ஆண்டுகளுக்குப் பின்பு இயேசு வந்தார்; மற்றும் அவர் தம்மைப் புதிய உடன்படிக்கையைக் கொண்டு வருபவராக மனபூர்வமாகக் கண்டார் (காண்க லூக்கா 22:20). லூக்கா 4:18, 19 வசனப்பகுதியானது, ஏசாயா 61:1, 2ல் காணப்படுகிற மேசியாத்துவ முன்னுரைத்தலை அவர் வாசித்ததைப் பதிவுசெய்துள்ளது, மற்றும் அவர் ஜெப ஆலயத்தில் இருந்தவர்களிடம், "உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று" என்று கூறினார் (லூக்கா 4:21). பவுல் பின்வருமாறு எழுதியதன் மூலம், தீர்க்கதரிசனத்தை இயேசு நிறைவேற்றியதை உறுதிப்படுத்தினார்:

> நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார் (கலாத்தியர் 4:4, 5).

கிறிஸ்தவர்கள் (இன்றைய நாட்களில் மற்றும் சிலுவையில் இயேசுவின் மரணத்தில் இருந்து) புதிய உடன்படிக்கையின் யுகத்தில் வாழ்கின்றனர் என்பதே புதிய ஏற்பாட்டின் நிலைப்பாடாக உள்ளது என்பது தெளிவு. இயேசுவின் நிமித்தமாக எரேமியா 31ன் வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்மை நிலையாகி உள்ளன.

2. *புதிய உடன்படிக்கையானது மீளக்கட்டுவிக்கப்பட்ட மக்களைக் கொண்டு வந்துள்ளது.* மீளக்கட்டுவிக்கப்பட்ட "இஸ்ரவேலில்" தேவனுக்கென்று "எல்லா மக்களினங்களும்" ஒன்றுகூட்டப்படும் என்று எரேமியா முன்னுரைத்தார் (3:16-18). இயேசுவில் விசுவாசம் கொள்ளும் யூதர்கள் மற்றும் புறஜாதியார் ஆகிய இருசாராருமே, தேவனுடைய புதிய உடன்படிக்கையின் மக்களாக "புதிய இஸ்ரவேலில்" உள்ளனர் என்று புதிய ஏற்பாடு அறிவிக்கிறது. பவுல், "கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம். இந்த பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக" என்று விளக்கப்படுத்தினார் (கலாத்தியர் 6:15, 16). சுவிசேஷம் (இயேசுவைப் பற்றிய நற்செய்தி), "முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது" என்று ரோமர் 1:16ம் வசனம் வலியுறுத்துகிறது. பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபம், கிறிஸ்துவின் சிலுவையில் தேவன், யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் இடையில் இருந்த "பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து" "இருதிறத்தாரையும் ஒன்றாக்கி" னார் என்று அறிவிக்கிறது (எபேசியர் 2:14). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "புதிய இஸ்ரவேல்" என்பது யூதர்களையும் புறஜாதியாரையும் கொண்டிருக்கிறது. தேவன் யூதாவையும் இஸ்ரவேலையும் அரசியல் ரீதியான உயிர்ப்பொருள்களாக மீளக்கட்டுவிக்கவில்லை, ஆனால் அவர்களைக் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளும் புறஜாதியார்களையும் உள்ளடக்கும் ஆவிக்குரிய வீட்டின் பாகமாக மீளக்கட்டுவித்தார்.

3. *புதிய உடன்படிக்கை மக்களின் இருதயங்களில் எழுதப்பட்டு இருக்கிறது.* கிறிஸ்துவின் சுவிசேஷத்தின்கீழ், சரியானவற்றைச் செய்வதற்கான நமது நோக்கமானது, சட்டங்களின் தொகுப்பில் உள்ள நிபந்தனைகளைக் கொண்டுள்ளதாக இருப்பதில்லை, ஆனால் அது நமது வாழ்வின் சிறந்த வகைக்கு நம்மை அழைக்கும் தியாகம் செய்த அன்பான மீட்பரைப் பற்றிய அறிவைக் கொண்டுள்ளது. (வாழ்வின் அந்த வகையானது வேதவாக்கியங்களின் எழுத்துக்களில் அமைத்து வைக்கப்பட்டுள்ளது, எனவே நாம் இன்னமும் "பிரமாணங்களை" கொண்டுள்ளோம்.) தேவன் நமக்கு ஒரு "புதிய பிரமாணத்தை" (புதிய கட்டளைகளை) கொடுத்தது மாத்திரமல்ல; வாழ்வதற்கென்று அவர் நமக்கு ஒரு புதிய ஊக்கப்படுத்துதலையும் (கிறிஸ்துவின் சிலுவை) ஒரு புதிய வல்லமையையும் (பரிசுத்த ஆவியானவர்) கொடுத்துள்ளார். (காண்க நடபடிகள்

2:38; 5:32; ரோமர் 8:6-14; எபேசியர் 1:11-14.)

4. புதிய உடன்படிக்கையின் தேவன், அதன் பகுதியாக உள்ள ஒவ்வொருவராலும் அறியப்பட்டு இருக்கிறார். பழைய உடன்படிக்கை ஆபிரகாமின் உடல்ரீதியான சந்ததியார் எல்லாரையும் உள்ளடக்கிற்று. இஸ்ரவேல் குலத்தில் பிறந்தார் என்பதாலேயே அவர் தேவனுக்குக் கீழ்ப்படிதல் உள்ளவராக இருப்பார் என்று அர்த்தப்படவில்லை. அது ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவுடனான நாட்டளவிலான உடன்படிக்கையாக இருந்தது. இதற்கு நேர்மாறாகப் புதிய உடன்படிக்கை, நாட்டளவிலானதாக இல்லாமல் இயல்பில் ஆவிக்குரியதாக உள்ளது. இயேசு தேவனுடைய குமாரனாக மற்றும் மேசியாவாக இருக்கிறார் என்று விசுவாசிக்காதவரையிலும், மனப்பூர்வமாக ஞானஸ்நானம் பெறுதல் மூலம் உடன்படிக்கையின் மக்களுடன் இணைவுகொள்ளப்படாத வரையிலும், எவரொருவரும் இந்தப் புதிய உடன்படிக்கையின் அங்கமாவதில்லை (காண்க நடபடிகள் 2:37, 38; கலாத்தியர் 3:26, 27; ரோமர் 6:3-5). உடன்படிக்கையின் மக்களுடைய அங்கமாக இருப்பதற்கு விசுவாசம் அத்தியாவசியமானதாக இருப்பதால், உடன்படிக்கைக்குள் இருக்கும் எவரொருவருக்கும் "கர்த்தரை அறிந்துகொள்ளும்படி" போதிப்பது அவசியமில்லை. (இது, உடன்படிக்கைக்கு வெளியே இருக்கும் மக்களுக்குப் போதிக்க வேண்டிய அவசியத்தை நீக்கிப்போடுவதில்லை; காண்க மத்தேயு 28:18-20.)

5. புதிய உடன்படிக்கை ஒருக்காலும் முறித்துப் போடப்படாது. கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையானது, ஒருக்காலும் முறித்துப் போடப்படாது என்ற வாக்குத்தத்தத்தைச் சாத்தியமான வகையில் எவ்வாறு நிறைவேற்றக்கூடும் என்று நாம் வியப்படையலாம். தேவன் நிச்சயமாகவே, உடன்படிக்கையின் தம்முடைய பாகத்தை நிறைவேற்றுவார். அவர் முதல் உடன்படிக்கையின் தமது பாகத்தைக் காத்துக்கொண்டார் - ஆனால் அதைக் காட்டிலும் அதிகமான விஷயம் உள்ளது. புதிய உடன்படிக்கையானது சபையினால் பூரணமாகக் காத்துக்கொள்ளப் பட்டுள்ளது என்று நாம் உரிமைகோர முடியுமா? இல்லை. விசுவாசிகளாக உள்ள தனிநபர்கள் புதிய உடன்படிக்கையைக் கைவிட்டு இனியும் அதன் அங்கமாக இராது போவதைத் தேர்ந்து கொண்டாலும் (கலாத்தியர் 5:2-4; எபிரெயர் 6), உடன்படிக்கையானது தன்னிலே முறிவுறாத நிலையில் நிலைத்துள்ளது. சபை என்பது கிறிஸ்துவுடனான தனது உடன்படிக்கையில் உண்மைத் தன்மையுடன் உள்ளது; அவ்வாறு இல்லை என்றால் அது சபையாக இராது.

6. புதிய உடன்படிக்கை ஒருக்காலும் முடிவுறாது. (புதிய ஏற்பாட்டில் புதிய உடன்படிக்கையைப் பற்றி அதிகமாகக் கூறும் புத்தகமான) எபிரெயருக்கு எழுதிய நிருபம் பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்கிறது:

> பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார் (எபிரெயர் 1:1, 2).

கிறிஸ்துவின் வருகையுடன் நாம், "கடைசி நாட்களில்" - அதாவது, தேவன் ஏற்படுத்தும் கடைசி உடன்படிக்கையின் ஏற்பாட்டிற்குள் - பிரவேசித்திருக்கிறோம். இயேசுவே தேவனுடைய "கடைசி வார்த்தையாக"

*இருக்கிறார், மற்றும் இரட்சிப்பைக் கண்டறியும் எவரும் அதை அவர் மூலமாகவே செய்வார். இந்த உடன்படிக்கை இன்னொரு உடன்படிக்கையைக் கொண்டு இடம் மாற்றப்படாது. புதிய ஏற்பாட்டில், எபிரெயர் 8:8-12 வசனங்கள் மாத்திரமே, ஏரேமியா 31:31-34 வசனப்பகுதி முழுமையாக மேற்கோள் காண்பிக்கப்படும் ஒரே இடமாக உள்ளது, இது பழைய உடன்படிக்கை முடிக்கப்பட வேண்டும் என்ற (தேவனுடைய) விருப்பநோக்கத்தைக் காண்பிக்க எரேமியாவின் தீர்க்கதரிசனத்தைக் குறிப்பிடுகிறது: "புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது" (எபிரெயர் 8:13). இதற்கு நேர்மாறாக, புதிய உடன்படிக்கை என்றென்றைக்கும் நிலைத்துள்ளது.*

*7. புதிய உடன்படிக்கை முழுமையான மன்னிப்பைக் கொண்டுவருகிறது. பழைய உடன்படிக்கையின்கீழ் கேட்டுக்கொள்ளப் பட்டிருந்த பலிசெலுத்துதல்கள் (விபரமான முறைமைகளுக்கு லேவியராகமத்தைக் காணவும்), இஸ்ரவேல் மக்களை அவர்களின் தேவனுடனான ஐக்கியத்தைப் பராமரிக்கக் கூடியவர்கள் ஆக்கியிருந்தாலும், அவர்களுக்கு ஏதோ ஒரு விஷயம் குறைவு பட்டிருந்தது. அவர்கள் பாவங்களை ஒரேதரமாக நீக்கிப்போடப் பலன் இல்லாதவர்களாக இருந்தனர். இதன் விளைவாக, அவர்கள் (பலிசெலுத்துதலை) திரும்பத் திரும்பத் தொடர்ந்து செய்ய வேண்டி இருந்தது. புதிய உடன்படிக்கையின் விஷயத்தில் ஒருவருடைய பாவங்கள் "இனியும் நினைக்கப்படாது" இருக்கக் கூடும் என்று எரேமியா உறுதிப்படுத்தியதற்கு மாறாக பழைய உடன்படிக்கையில் பலிசெலுத்துதல்கள் அந்தப் பாவங்களைத் தொடர்ந்து நினைவூட்டுபவையாக இருந்தன. எபிரெயருக்கு எழுதிய நிருபம், சிலுவையில் இயேசு மரித்தது அது எல்லாவற்றையும் மாற்றியது என்று விளக்கப்படுத்துகிறது. அவர் முந்திய பலிகள் ஒருக்காலும் நிறைவேற்ற இயலாது இருந்த விஷயத்தை நிறைவேற்றும் ஒரு பலியை அளித்தார்:*

> *கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமுமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார் ...*
>
> *ஆகையால், முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார் (எபிரெயர் 9:11-15).*
>
> *அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே*

> *இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார். பிரதானஆசாரியன் அந்நிய இரத்தத்தோடே வருஷந்தோறும் பரிசுத்தஸ்தலத்துக்குள் பிரவேசிக்கிறதுபோல, அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக்கவில்லை. அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார். அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் (எபிரெயர் 9:24-28).*

## புதிய உடன்படிக்கையில் மறைவாக உள்ள கருத்துக்கள்

புதிய உடன்படிக்கையின் வருகையை அறிவித்த எரேமியா அதன் மறைவான கருத்துக்களைக் கூறாவிட்டாலும், புதிய ஏற்பாடு - குறிப்பாக எபிரெயருக்கு எழுதிய நிருபம் - அதைக் கூறுகிறது. உடன்படிக்கைகளில் ஏற்பட்டுள்ள மாற்றமானது, இன்றைய நாட்களில் வேதாகமத்தை விளக்கப்படுத்துவதில் அடிக்கடி காணப்படாமல் விடப்படுகிறது; அவ்வாறு காணப்படாமல் விடப்படும்போது, அதிகமாகத் தவறாகப் புரிந்துகொள்ளுதல் விளையக்கூடும். இங்கு எபிரெயர் 8-10 அதிகாரங்களில் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ள, புதிய ஏற்பாட்டின் மறைவான கருத்துக்கள் சில உள்ளன:

1. *இயேசுவின் நிமித்தமாக, பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவம் ஒழிக்கப்பட்டது* (காண்க 7:1-8:13). இப்போது இயேசு நமது பிரதான ஆசாரியராக இருக்கிறார், நமக்கு வேறு யாரும் தேவையில்லை. உண்மையில் புதிய ஏற்பாடு, இப்போது நிலவுகிற சட்டப்பூர்வமான ஒரே ஆசாரியத்துவம் கிறிஸ்துவினுடையது மாத்திரமே என்று போதிக்கிறது. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாமே, "ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்" என்று அழைக்கப்படுகிறோம் (1 பேதுரு 2:9, 10) மற்றும் சிலவேளைகளில் "எல்லா விசுவாசிகளின் ஆசாரியக்கூட்டம்" என்று அழைக்கப்படுகிறோம். 1 தீமோத்தேயு 2:5ல் பவுல், "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே" என்று கூறியுள்ளபடி, கிறிஸ்துவின் பரிந்து பேசுதலினால், நமக்கு இனியும் மனிதரீதியான பரிந்துரையாளர்கள் தேவையில்லை.

2. *இயேசுவின் நிமித்தமாக, பழைய உடன்படிக்கையின்படியான ஆராதனை இடம் மாற்றப்பட்டுள்ளது* (காண்க 9:1-11). கிறிஸ்துவின் மூலமாக ஆராதனை என்பது குறிப்பிட்ட ஏதோ ஒரு இடத்தில் செய்யப்பட வேண்டியதில்லை. (வனாந்தரத்தில் இஸ்ரவேலர் தூக்கிச் சென்ற பரிசுத்த ஸ்தலமான) ஆசரிப்புக் கூடாரமும் எருசலேமில் இருந்த தேவாலயமும், இஸ்ரவேல் மக்களின் பலிமுறைமையில் மைய இடங்களாக இருக்கையில், கிறிஸ்தவ விசுவாசமானது பூகோளரீதியான எந்த இடத்தையும் மையங்கொண்டிருப்பதில்லை. மாறாக அது கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்து அவருக்குக் கீழ்ப்படிபவர்களின் இருதயத்தில் நிலவுகிறது (யோவான் 4:21-24). கிறிஸ்தவர்கள் எங்கு வேண்டுமானாலும் எல்லா

இடங்களிலும் ஆராதிக்க முடியும்.

*3. கிறிஸ்துவின் நிமித்தம், பழைய உடன்படிக்கையின் பலிகள் இனியும் செல்லுபடியாவதில்லை* (காண்க 9:12-10:18). தற்காலிகப் பலிகளின் குறைபாடுகள், பரிபூரணமான, எல்லாக்காலத்திற்கும் ஒரேமுறையிலான இயேசுவின் பலியினால் நிவிர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. உலகத்தின் பாவங்களுக்காக "தேவனுடைய ஆட்டுக்குட்டியானவர்" பலியிடப்பட்டுள்ள இந்த வேளையில், பழைய பலிகள் சாத்தியமானவகையில் எந்த மதிப்பையாவது கொண்டிருக்கக் கூடுவது எப்படி?

*4. கிறிஸ்துவின் நிமித்தம், புதிய உடன்படிக்கையின் வேதவாக்கியங்கள் பழைய உடன்படிக்கையின் வேதவாக்கியங்களுக்கும் மேலாக முக்கியத்துவம் பெறவேண்டும்.* இந்தக் கொள்கையானது, எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் வெளிப்படையாகக் கூறப்படாது இருக்கையில், இது நிச்சயமாகவே மறைமுகமாக உணர்த்தப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் முன்னிழலிடப் பட்டது என்ன என்பதன் உண்மையான அர்த்தம், தனிச்சிறப்பு மற்றும் அவற்றின் நிறைவேற்றம் ஆகியவற்றைப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் விளக்கப்படுத்தினர் என்ற உண்மையே, அவற்றிற்கு (புதிய ஏற்பாட்டு வேதவசனங்களுக்கு) நாம் நெருங்கிய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று காண்பிக்கிறது. ஏவுதல் பெற்ற இந்த விளக்கங்கள் நமக்குப் புதிய ஏற்பாட்டைப் புரிந்துகொள்வதில் உதவிகரமாக இருப்பது மட்டுமின்றி, குறிப்பாகப் பழைய ஏற்பாட்டைப் புரிந்துகொள்வதில் உதவிகரமாக இருப்பது மட்டுமின்றி, குறிப்பாகப் பழைய ஏற்பாட்டைத் தக்க வகையில் விளக்கப்படுத்தவும் உதவுகின்றன. புதிய உடன்படிக்கை என்ற உருப்பெருக்கியின் மூலமாக வாசிக்கும்போது மட்டுமே நாம் பழைய உடன்படிக்கையைப் புரிந்துகொள்ள இயலும்.

தேவனுடைய சித்தம் பற்றிய அவரது வெளிப்படுத்துதல் வளர்நிலை கொண்டதாக இருந்துள்ளது; அவர் தமது படைப்பிற்காகத் தாம் கொண்டுள்ள திட்டங்கள் மற்றும் இலக்குகளைப் படிப்படியாக விரித்துரைத்துள்ளார். அதுபோன்றே, வேதாகமத்திற்குள் காணப்படுகிற எழுதப்பட்ட வெளிப்படுத்துதலும் படிப்படியானதாக இருந்துள்ளது. இது, பழைய ஏற்பாட்டில் மிகவும் முக்கியமானவையாக இருந்த (ஆசாரியத்துவம் மற்றும் பலிசெலுத்தும் முறைமை போன்ற) சில விஷயங்கள், கிறிஸ்துவின் வருகையினுடைய வெளிச்சத்தில் மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும், அவைகள் கிறிஸ்தவர்களால் வெறுமனே தழுவப்படலாகாது என்று அர்த்தப்படுகிறது. எவ்வகையிலும் இது, இவைகள் முக்கியத்துவம் கொண்டிருப்பதில்லை என்று கருத்துத் தெரிவிப்பதில்லை, ஏனெனில் முன்பு எழுதப்பட்டவைகளெல்லாம் "நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" என்று புதிய ஏற்பாட்டு நமக்கு கூருகிறது (ரோமர் 15:4; 1 கொரிந்தியர் 10:6-11). அவற்றைப் படிப்பதனால் நாம் அதிகமானவற்றைக் கற்றுக்கொள்ள முடியும், மற்றும் அவைகள் நமக்குத் தேவனுடைய வார்த்தையாகவே இருக்கத் தொடருகின்றன. அவைகள் புதிய ஏற்பாட்டில் செய்யப்பட்டதாக நாம் கண்டறியும், இயேசு என்ற தேவனுடைய மேசியாவின் வருகையின் வெளிச்சத்தில் விளக்கப்படுத்தப்பட வேண்டும்.

பழைய உடன்படிக்கை, தேவனுடைய மக்களான இஸ்ரவேலருக்கு ஒரு அற்புதமான கொடையாக இருந்தது. அது அவர்களைத் தேவனுக்குள்

ஒரு உடன்படிக்கையின் உறவினுள் அழைப்பதற்கு அவருடைய பகுதியில் செய்யப்பட்ட கிருபையும் இரக்கமும் நிறைந்த ஒரு செயலாக இருந்தது. அவர்களுக்கு அவர் கொடுத்திருந்த இந்த உயர்வான அழைப்பிற்கு ஏற்றபடி வாழ அவர்கள் தவறினர் என்பது எவ்வளவு கவலைக்குரியதாக உள்ளது! தேவன் கிருபையும் இரக்கமும் உள்ளவராக இருப்பதால், அவர் தமது மக்களை அந்த நிலையிலேயே விட்டுவிட மனவிருப்பம் இல்லாதிருந்தார். அவர் ஒரு புதிய உடன்படிக்கையையும் அதைத் தமது குமாரனுடைய பலியின் மூலமாக நடப்புக்குக் கொண்டுவருவதையும் வாக்குத்தத்தம் செய்தார். இப்போது கிறிஸ்தவர்கள், நமக்குத் தேவன் இவ்வளவு கிருபையாகக் கொடுத்துள்ள உடன்படிக்கையின் மூலமாக அவருக்கு உண்மையுள்ளவர்களாக வாழும்படியான சிலாக்கியத்தையும் அறைகூவலையும் கொண்டுள்ளோம்.

---

## பழைய & புதிய "ஏற்பாடுகள்"

நமது வேதாகமங்கள் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு என்று இரு முதன்மைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரிவினையானது, ஏரேமியாவினால் உரைக்கப்பட்ட புதிய உடன்படிக்கையின் நிலைநாட்டத்துடன் நேரடியாக உறவுபட்டுள்ளது மற்றும் இது எபிரெயருக்கு எழுதிய நிருபம் (காண்க 9:15) போன்ற புதிய ஏற்பாட்டு எழுத்துக்களினால் உறுதிப்படுத்தப்பட்டும் இருக்கிறது. பழைய ஏற்பாடு, பழைய உடன்படிக்கை நிலைநாட்டப்படுதல் மற்றும் அந்த உடன்படிக்கையின் மூலமாகத் தேவன் இஸ்ரவேல் மக்களுடன் செயல்பட்டவிதம் ஆகியவற்றைப் பற்றி எடுத்துரைக்கையில், புதிய ஏற்பாடு, இயேசு கிறிஸ்துவினால் கொண்டுவரப்பட்ட புதிய உடன்படிக்கையின் இருப்பைப்பற்றி விவரிக்கிறது.

திட்டவட்டமாகப் பேசுவதென்றால், வேதாகமத்தின் இரு பிரிவுகளும் "பழைய உடன்படிக்கை" மற்றும் "புதிய உடன்படிக்கை" என்றே அழைக்கப்பட வேண்டும். வேதாகமம் இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டபோது, (*diatheke*, "உடன்படிக்கை" என்ற) கிரேக்க வார்த்தையை மொழிபெயர்ப்பதற்கு *testamentum* ("ஏற்பாடு") என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது. இதற்கு இணையான ஆங்கில வார்த்தை "testament" என்பதாகும் (தமிழில் இது "ஏற்பாடு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). இதன் விளைவாக, நாம் "பழைய ஏற்பாடு" மற்றும் "புதிய ஏற்பாடு" என்று பேசத் தொடருகிறோம், இது வேதவசனங்கள் விவரித்து விளக்குகிற இரு உடன்படிக்கைகளை அர்த்தப்படுத்துகிறது. மொழிபெயர்ப்பின் செயல்பாட்டில், தேவனால் நிலைநாட்டப்பட்ட இரு உடன்படிக்கைகளின் மீதான சில வலியுறுத்தங்களை நாம் தவறவிடுகிறோம்; ஆனால் வேதாகமத்தின் எழுத்துக்களின் மீது நாம் ஜாக்கிரதையாகக் கவனம் செலுத்தினால், அவைகள் இதைப் போதிய அளவுக்குத் தெளிவாக்குகின்றன.

---

## தேவனால் "மறக்க" முடியுமா?

புதிய உடன்படிக்கையின்கீழ் தேவன், "... அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்." என்று வாக்குத்தத்தம் செய்தார் (எரேமியா 31:34). மறத்தல் என்பதை ஒரு கடன், ஒரு பலவீனம், தகவலைத் திரும்ப நினைத்துப் பார்க்க இயலாத மனத்திறன் குறைவு என்ற வகையில் நாம் நினைக்கிறோம்.

*அப்படி என்றால், பரிபூரணமான மற்றும் சர்வ வல்லமையுள்ள நமது தேவன் பாவங்களை "மறக்க" முடிவது எவ்வாறு?*

*உண்மையில் வேதாகமமானது, சில பொருட்களை எவ்விடத்தில் வைத்தோம் என்பதை நீங்களும் நானும் மறப்பது போன்று தேவன் பாவத்தை மறக்கிறார் என்று போதிப்பதில்லை. மாறாக, நமது பாவங்களைத் தேவன் "மறக்கிறார்" என்ற வகையில், "மறத்தல்" என்பது நமது பாவங்களை இனியும் நமக்கு எதிராகப் பிடித்துக் கொண்டு இருப்பதில்லை என்றே அர்த்தப்படுகிறது. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டுமே காண்பிக்கிறபடி, தேவன் நமது தோல்விகள் யாவற்றையும் நன்கு நினைவில் வைத்துள்ளார்; ஆனால் கிறிஸ்துவின் மூலமாக மன்னிப்பு வருவதால், அவைகள் (தோல்விகள்) ஒருக்காலும் நடக்காததவை போன்றுள்ளது.*

*தேவனைப் போன்று நாமும் "மன்னித்து மறக்க" வேண்டும் என்று மக்கள் கூறுவதை நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம், இது மற்றவர்கள் நமக்கு எதிராகச் செய்யும் தவறுகளை நாம் இனியும் நினைவில் கொண்டிராத திறனை நாம் கொண்டிருக்க வேண்டும் என்று மறைமுகமாகக் குறிப்பிடுகிறது; ஆனால் நாம் உண்மையிலேயே மன்னித்திருந்தால், நாம் மன்னித்தவற்றைத் திரும்ப நினைவுக்குக் கொண்டுவராதவர்கள் போன்று செயல்பட்டு அந்தக் தவறுகளுக்கு மற்றவர்களைத் தொடர்ந்து கணக்கு ஒப்புவிப்பவர்களாக நிறுத்தி வைப்பதைச் செய்ய மறுத்துவிடுகிறோம். இந்தக் கருத்தில் நாம், தேவனைப் போன்று "மன்னித்து மறப்பவர்களாக" இருக்கிறோம், ஏனெனில் அவர் மிகச்சரியாக இதையே செய்கிறார்.*

> *இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால், அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா? அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது. அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே (எபிரெயர் 10:1-4).*

*இயேசுவின் வருகை மற்றும் சிலுவையின் மீது அவரது மரணம் ஆகியவற்றுடன், எரேமியா 31ன் தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து புதிய உடன்படிக்கையின் கீழ் உள்ளவர்களின் பாவங்கள் முற்றிலுமாக மன்னிக்கப்பட்டு இனியும் நினைவில் வைக்கப்படாது உள்ளன. இயேசுவின் வரலாறு "நற்செய்தி" என்று அழைக்கப்படுவதில் வியப்பு எதுவும் இல்லை!*